# வானவில்

VAANAVIL
ISSUE – 51 MARCH 2015

இதழ் - 51 பங்குனி 2015


# ரணில் – மைத்திரி அதிகாரப் போட்டியை விடுத்து 1978இன் மக்கள் விரோத அரசியலமைப்பை முற்றாக மாற்ற வேண்டும்!



இலங்கையில் இவ்வருடம் ஜனவரி 8ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஓரணியில் திரண்டு நின்று அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை தோற்கடித்தன. தாம் ஓரணியில் திரண்டதிற்கு அவர்கள் சொன்ன காரணங்கள், மகிந்த ராஜபக்ச சர்வாதிகார ஆட்சி நடாத்துகிறார், குடும்ப ஆட்சி நடாத்துகிறார், ஊழல் மோசடித்தனமான ஆட்சி நடாத்துகிறார், இனவாத ஆட்சி (இது தமிழ் – முஸ்லீம் கட்சிகளின் குற்றச்சாட்டு) நடாத்துகிறார் என்பவை ஆகும்.

அவர்கள் அவரை எதிர்ப்பதற்கான ஒரு காரணத்தை மட்டும், அதுவும் மிக முக்கியமான காரணத்தை மட்டும் சொல்லவில்லை. அதாவது தம்மை ஓரணியில் திரள்வதற்கு பின்னணியில் நின்று செயற்பட்ட உலக மற்றும் பிராந்திய வல்லாதிக்க சக்திகளுக்கு மகிந்த எதிரானவர் என்றபடியால்தான் தாம் அந்த சக்திகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒன்றுபட்டு நிற்கிறோம் என்ற விடயத்தை மட்டும் அவர்கள் சொல்லவில்லை.

அந்த விடயத்தை மறைத்துவிட்டு, மகிந்தவை வீழ்த்தி நாட்டில் 'நல்லாட்சி' கொண்டுவரப் போகின்றோம் என்று மட்டும் சொன்னார்கள். அந்த நல்லாட்சி என்பது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமையை ஒழித்து பாராளுமன்றத்தை அதிகாரம் மிக்கதாக்குவது, தேர்தல் முறையில் நிலவும் விகிதாசார மற்றும் விருப்பு வாக்கு முறையை ஒழிப்பது, சுதந்திரமான முறையில் நீதித்துறை மற்றும் பொலிஸ் சேவை என்பனவற்றை இயங்க வைப்பது, ஊடக சுதந்திரத்தை பாதுகாப்பது இப்படி பலப்பல.

இதிலும் கூட நாட்டின் பல பிரச்சினைகளுக்கு அடிப்படையான, நாட்டை 30 வருடங்களாக உள்நாட்டு போர் என்ற அழிவுக்கு இட்டுச் சென்ற இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது சம்பந்தமாக ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் எதிரணி கட்சிகள் எவ்வித திட்டத்தையும் முன்வைத்திருக்கவில்லை. இருந்தும் வழமை போலவே உதைத்த காலை நக்கி பழக்கப்பட்டுப்போன தமிழ் தலைமை (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) எவ்வித நிபந்தனையும் இன்றி எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்தது.

புதிய ஜனாதிபதியும் புதிய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்தபின்னர் '100 நாள் வேலைத்திட்டம்' ஒன்றின் மூலம் முக்கியமான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தனர். அதில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க..

# முளையில் கிள்ளியெறிய வேண்டும்

**'ந**ல்லாட்சி' மலர வேண்டுமென்ற ஒரேயொரு நோக்கத்திற்காக மாத்திரமே இந்தியாவும் மேற்கத்தைய சக்திகளும் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த பின்னணியில் நின்றார்கள் என்ற கதையொன்றினை இப்பொழுது பல தரப்பினரும் (தற்போதைய ஆட்சியாளர்கள், இந்திய அரசியல் கட்சிகள், அமெரிக்க – ஐரோப்பிய – இந்திய – வெளியுறவு ராஜதந்திரிகள், மனித உரிமை பேசும் புத்திஜீவிகள், ஊடகங்கள்) அவிழ்த்து விட்டிருக்கிறார்கள். குறிப்பாக இலங்கையின் வெளியுறவுக் கொள்கை முன்னைய ஆட்சியில் சீர்கெட்டு போயிருந்ததாம், ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவின் போர்க்குற்ற விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க மறுத்ததாம், 2009 ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னரும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்தனவாம். இப்படிச்சில குற்றச்சாட்டுகளை முன்னைய அரசு மீது மேற்குறித்த தரப்பினர் முன்வைக்கின்றனர்.

இலங்கையில் 'நல்லாட்சி' அல்லது 'புதிய ஆட்சி' அவசியம் என்ற வலுவான கோரிக்கை எதுவுமே முன்னைய ஆட்சியில் இலங்கை மக்களிடையே இருந்து எழவில்லை. அதாவது குறிப்பிட்டு சொல்லக் கூடியளவிற்கு, முன்னைய ஆட்சியாளர்களுக்கு எதிராக அதிருப்தி தெரிவித்து மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டங்களில் எதிலும் ஈடுபடவில்லை. அப்படி ஏதாவது நடந்திருந்தால் மக்களின் மனநிலையும் ஆட்சிமாற்றத்தினை நோக்கியிருந்ததெனக் கூறலாம்.

தேர்தல் அறிவிப்புக்கு முன்னரே, தேர்தலொன்று வந்தால் எப்படி காய்களை நகர்த்த வேண்டும் என்ற வியூகங்கள், தற்போதைய ஆட்சியாளர்களுக்கும் இலங்கையை தங்கள் வலையில் விழுத்த எண்ணியிருந்த வெளிச்சக்திகளுக்கும் (அமெரிக்கா – ஐரோப்பா – இந்தியா) இருந்தது. தேர்தலில் வெற்றி பெற்றவுடன் இலங்கையை எப்படி தமது பிடிக்குள் தக்க வைத்துக் கொள்வது என்பதும், முற்கூட்டியே இவர்களால் திட்டமிடப்பட்டிருந்தது.

அந்தத்திட்டம் தற்போதைய ஆட்சியாளர்கள் சொல்லிக் கொண்டிருக்கும் வெறும் நூறு நாட்களுக்குள் அடங்கியதல்ல. அது நீண்டகால திட்டம். அமெரிக்க – ஐரோப்பிய – இந்திய அச்சில் இலங்கையை தொடர்ச்சியாக சுழல வைத்திருப்பதே அவர்கள் வகுத்திருக்கும் அந்தத் திட்டம். நீண்ட காலமாக இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் வல்லரசுக் கனவுகளோடு திளைத்திருக்கும் இந்தியா, இலங்கையை தனது பிடிக்குள் மாத்திரம் வைத்திருக்கும் முயற்சியில் 80களின் பிற்பகுதிகளில் தோற்றுப்போனது எல்லோருக்கும் தெரிந்ததே. அதனால் இலங்கையையும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு, மாறி வரும் அமெரிக்கா தலைமையிலான புதிய உலக ஒழுங்கில் கனடா, யப்பான், தென்கொரியா மற்றும் பல ஐரோப்பிய நாடுகளுடன் இந்தியாவும் சேர்ந்து கொண்டுள்ளது.

புதிய அரசு பதவிக்கு வந்து இருமாத காலத்தினுள் தற்போதைய ஜனாதிபதி இந்தியாவிற்கும் பிரித்தானியாவிற்கும் விஜயம் செய்துள்ளார். அத்துடன் இவர் இம்மாத இறுதியில் சீனாவிற்கும் பயணம் செய்யவுள்ளார். அதேவேளை வெளியுறவு அமைச்சர் இந்தியா, அமெரிக்கா, சீனா, பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கும், ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்கும் சென்றுள்ளார். அவசர, அவசரமாக செய்யப்படும் இந்த வெளிநாட்டு பயணங்களை வைத்து பார்க்கும் போது, இந்து சமுத்திர பிராந்தியத்தில் இலங்கை, அமெரிக்க – ஐரோப்பிய – இந்திய சார்பானதா அல்லது சீனா சார்பானதா என்பதைத் தெளிவாக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது போல் தெரிகின்றது.

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசினை தேர்தலில் தோற்கடிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டில் வெற்றியீட்டிய தமிழ் தரப்பினர் இருமாத காலத்தில், கொஞ்சம் கொஞ்சமாக தற்போதைய அரசுக்கு எதிராகவும் (புலிக்கொடி, காணாமற்போனவர்களின் மற்றும் யுத்தக்காட்சிகளின் படங்களை தாங்கி) போராட்டங்களை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் முடுக்கிவிட்டுள்ளனர். முன்னைய அரசை தேர்தலில் தோற்கடித்ததோடு மட்டும் நின்றுவிடாது, தொடர்ச்சியாக புதிய அரசிற்கும் தலையிடி கொடுக்க வேண்டும் என்ற திட்டமும் முற்கூட்டியே வகுக்கப்பட்டுள்ளது என்பதையே இது எடுத்துக் காட்டுகின்றது. அதாவது இலங்கையின் மத்தியிலுள்ள அரசினை பலவீனப்படுத்தி தாம் விரும்பும் இலக்கை அடைவதற்கான யுக்தி.

இலங்கையுடன் சேர்த்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தியையும் வளைத்துப்போட நினைக்கும் வல்லரசுகளினதும் தமிழ் பிரிவினைவாதிகளினதும் சூழ்ச்சிகளுக்கு எதிராக, இலங்கையின் மத்தியில் வலுவான அரசு ஒன்றினை நிறுவவேண்டுமென்ற எண்ணப்பாட்டில் இலங்கையின் அரசியல் கட்சிகளுக்கிடையே ஒருமித்த நிலைப்பாடு உருவாக வேண்டும். அப்போதுதான் அமெரிக்க – ஐரோப்பிய – இந்திய கூட்டில் உருவாக்கப்பட்ட தற்போதைய அரசு விருட்சம் பெறுவதை தடுத்து நிறுத்த முடியும். *

## வானவில்

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

# சிந்து நாகரிகம்

–ராகுல சங்கிருத்தியாயன்



ஆரியர்கள் முதன் முதலாக சப்தசிந்து பிரதேசத்தில் குடியேறிய போது 'ரிக்வேதம்' உருப்பெறவில்லை. சப்த சிந்துவில் ஆரியர்களின் விஸ்தரிப்பு அமைதியாக நடைபெறவில்லை. ஆரியர்களின் எதிரிகள் அவர்களைக் காட்டிலும் அதிக நாகரிகமானவர்களாகவும், நகரங்களில் வாழ்பவர்களாகவும் இருந்தனர். அவர்களுடன் இரத்தம் சிந்திய போர் சுமார் கி.மு. 1500-இல் நடைபெற்றது. ஹரப்பாவில் நிகழ்த்தப்பட்ட அகழ்வராய்ச்சியில் நிர்தாட்சண்யமான கொலைத் தாண்டவம் நடந்ததற்கான அத்தாட்சி கிடைத்துள்ளது.

'ரிக்வேத' ரிசிகளான பரத்வாஜர், வசிஸ்டர், விஸ்வாமித்திரர் ஆகியோரும், அவர்களின் போசகர்களான (எஜமானர்களான) திவோதாஸும், ஸுதாஸும் ஆரியர் சப்தசிந்துக்குள் பிரவேசித்த பிறகு, வெகு பிற்காலத்தில் தோன்றியவர்கள்...

உண்மையில் ஆரியர்கள் சிந்துவின் புராதன நாகரிகத்தை அழிக்கவும், சமுதாய முன்னேற்றத்தை தடுத்து நிறுத்தவும் முயற்சித்தார்கள். அவர்கள் தம்முடன் கொண்டு வந்த நாடோடி வாழ்க்கையையே நிலை நிறுத்த விரும்பியதுடன், உலகை வெற்றி கொண்ட செங்கிஸ்தானின் மங்கோலியரைப் போலவே நகரங்களையும் நாகரிக வாழ்க்கையையும் வெறுத்தார்கள்.

ஆரிய மன்னர்களான தவோதாஸ், ஸுதாஸின் தலைநகர்களைப் பற்றியோ, மற்ற நகரங்களைப் பற்றியோ எங்குமே குறிப்பிடப்படவில்லை.
குதிரைகளையும், பசுக்களையுமே தமது செல்வமாகக் கருதும் அவர்களால் நகரங்களில் எப்படி இருக்க முடியும்? கால்நடை மேய்ப்பாளரான ஆரியர்கள் எப்படிப்பட்ட நாகரிகத்திற்குப் பிறகு வந்தவர்கள்? சிந்து நாகரிகத்தைத் தம்மகத்தே கொண்டவர்களிடம் மொகஞ் சோதாரோ போன்ற நகரங்கள் இருந்தன.
அந்நகரங்களைப் பற்றி ஒரு ஆங்கில எழுத்தாளர், "நாம் தற்கால லங்காசையர் போன்ற நகரத்தின் இடிபாடுகளிடையே நின்றிருப்பதைப் போல் தோன்றுகிறது" என்று எழுதியிருக்கிறார்.

அங்கே வடக்கிலிருந்து தெற்கில் செல்லும் பாதை அகலமாக இருக்கிறது. அதில் சக்கரங்களைக் கொண்ட வாகனங்களும், பாதசாரிகளும் வசதியாகச் செல்லலாம். நகரம் திட்டமிட்டு அமைக்கப்பட்டுள்ளது. பாதைகள் ஒன்பது முதல் முப்பத்திநாலு அடி அகலத்துடன் அரைமைல் வரையிலும் நேராக உள்ளன. அவை ஒன்றையொன்று சம கோணத்தில் கடந்து நாற்சந்திகளை உண்டாக்குகின்றன. ஒவ்வொரு பாதையிலும், தெருவிலும் பொதுக் கிணறுகள் இருந்தன. பெரும்பாலான வீடுகளில் சொந்தக் கிணறுகளும் இருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் குளியலறையும் இருந்தது. கழிவு நீர் போக நிலத்தடி கால்வாய்கள் செம்மையாகக் கட்டப்பட்டன. அவற்றைக் கண்டு இன்றைய நகரங்கள் கூடப் பெருமைப்படலாம்.

பணக்காரர்களும், வியாபாரிகளும், கைவினைஞர்களும், தொழிலாளர்களும் இருந்து வந்த பகுதிகளை, அவற்றின் இடிபாடுகளைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம். அதைக் காணும்போது, அது ஒரு ஜனநாயக முதலாளித்துவ நகரமாகத் தோன்றுகிறது. வீடுகள் பெரும்பாலும் சுட்ட செங்கல்லால் கட்டப்பட்டுள்ளன. அவை உருவிலும், நிறத்திலும் இன்றைய செங்கற்களைப் போலவே இருக்கின்றன. ஒரு கூர்மையான கத்தியின் முனையைக்கூட உள்ளே நுழைக்க முடியாத அளவுக்கு செங்கற்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீடும் வசதியாகவும், சுத்தமாகவும் இருந்தது. மிகச் சிறிய வீடுகளிலும் இரண்டு அறைகள் இருந்தன. பெரிய வீடுகளோ மாளிகைகள் போலவே இருந்தன. நடுவில் செங்கல் பரப்பப்பட்ட முற்றம் இருந்தது. அதன் ஓரத்தில் அறைகளும், கதவுகளும் சன்னல்களும் இருந்தன. முக்கிய வாசல் தெருப்பக்கம் இருந்தது. எல்லா வீடுகளிலும் குளியலறை தெருப் பக்கமே அமைக்கப்பட்டிருந்தது. பஞ்சாபில் பழைய வீடுகளில் உள்ளதைப் போலக் கழிவறை வீட்டு மாடியில் இருந்திருக்கலாம். பாதைகளில் இரவு நேரங்களில் விளக்குகள் எரிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

அங்கே வாழ்ந்த மக்கள் கோதுமையும், சவ்வரிசியும் பயிர் செய்தார்கள். நெல்லும், எள்ளும், பட்டாணியும் கூடப் பயிரிடப்பட்டன. பேரீச்சம் பழமாவது அவர்கள் சாப்பாட்டில் இருந்தது. ஏரிகளிலும், ஆறுகளிலும்

கிடைத்த புத்தம் புதிய மீன்களுடன் அவர்கள் பசு, ஆடு, செம்மறியாடு, பன்றி, கோழி, ஆமை ஆகியவைகளின் இறைச்சியையும் உண்டனர். எருமை, யானை, ஒட்டகம் போன்றவற்றின் எலும்புகளும் அங்கே கிடைத்ததால், அவைகளையும் அவர்கள் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

அவர்கள் பருத்தி, கம்பளி ஆடைகளை அணிந்தார்கள். சாதாரணமாக ஒரு துணியை வேட்டி போல் உடுத்தினார்கள். இன்னொரு துணியை மேல் துண்டாகப் பூணூல் மாதிரி வலது தோள்பட்டை திறந்திருக்குமாறு போட்டுக் கொண்டார்கள். பெண்கள் உடையும் ஆண்களைப் போலவே இருந்தது. குசாணர்கள் நம் நாட்டிற்குள் பிரவேசிக்கும் வரை நம் நாட்டுப் பெண்கள் தம் தலையைத் தலைப்பாகையாலோ, ஒரு துணியாலோ மறைத்து வந்தார்கள். இதைப் போலவே மொகஞ்சோதாரோ பெண்களும் செய்து வந்தார்கள்.

ஆண்கள் நீண்ட முடியை வைத்துக் கொண்டிருந்தார்கள். அதை வகிடெடுத்து சீவிக்கொண்டார்கள். மீசையையும், தாடியையும் கத்தரித்துச் சிறியவையாக வைத்துக் கொண்டார்கள். பெண்களுக்குப் பொன், வெள்ளி, தாமிரம், பித்தளை, மண், கல்லாலான நகைகள் என்றால் மிக விருப்பம். ஆண்கள் கைவளையமும், கழுத்துச் சங்கிலியும், மோதிரமும் அணிந்திருந்தார்கள். முடியில் அணியும் தலைவில்லையும் அவர்களுக்கு இஸ்டந்தான்! பெண்கள் முகப்பவுடரும், கண்மையும் அல்லாமல், உதட்டுச்சாயமும் பயன்படுத்தியதாகத் தெரிகிறது.

வீட்டுச் சாதனங்களாகத் தாமிரம், பித்தளையால் தயாரிக்கப்பட்ட ஊசிகள், கோடரி, அரிவாள், கத்தி முதலியவை பயன்படுத்தப்பட்டு வந்தன. நிறுத்தல் - அளவைகள் இன்று ஒரு ரூபாயைப் பதினாறு பாகங்கள் செய்வது போல் செய்யப்பட்டிருந்தன. (1957ஆம் ஆண்டுக்கு முன் ஒரு ரூபாய்க்குப் பதினாறு அணாக்கள் என்று இருந்தன)

போரிடுவதற்கு அவர்களிடம் தாமிரம், பித்தளையால் தயாரிக்கப்பட்ட கோடரிகளும், ஈட்டிகளும், கத்திகளும், வாட்களும் இருந்தன. மெல்லிய தாமிரத் தகடுகளால் கவசம் உருவாக்குவதையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் கல்லாலான ஆயுதங்களையும் உபயோகித்தார்கள்.

பொன், வெள்ளிக்காகவும், இதர உலோகங்களுக்காகவும், இரத்தினங்களுக்காகவும் அவர்கள் மைசூர், காஸ்மீர், கிழக்கிந்தியாவுடனும், மத்திய ஆசிய, மேற்கத்திய நாடுகளுடனும் தொடர்பு கொண்டிருந்தார்கள். அவர்களுடைய படகுகள் கடலில் மிதந்து வந்தன. மெசப்பொடோமியா மட்டுமல்லாமல், எகிப்துடனும் கூட அவர்கள் வாணிப உறவு வைத்திருந்தார்கள்.

அவர்களது உயர்ந்த வர்க்கத்தில் புரோகிதர்களும், போர்வீரர்களும், வணிகர்களும் இருந்தார்கள். வணிகர்களின் செல்வமும், செல்வாக்கும் அபாரமாக இருந்தன. போரில் ஆரியர்களின் வெற்றிக்குப் பின்னர், புரோகிதர்களின் செல்வாக்கும், போர் வீரர்களின் செல்வாக்கும் குறைந்து விட்டிருக்கலாம். ஆனால் அப்போதும் வணிகர்கள் சிறப்புடனே விளங்கினார்கள். அவர்களை 'பணிகள்' என்றழைத்து ஆரியர்கள், அவர்களின் பேராசையை வெறுப்புடனே நோக்கினார்கள். 'பணி' எந்த மொழிச் சொல்லோ தெரியவில்லை. அநேகமாக அது ஆரிய மொழிச் சொல்லல்ல. சமஸ்கிருதத்தில் கொள்முதலுக்கும், விற்பனைக்கும் 'பணி' என்னும் சொல் பயன்படுத்தப்பட்டாலும், பாரதத்திற்கு வெளியே இந்தோ — ஐரோப்பிய மொழிகளில் இந்தச் சொல் இல்லாததால், இது வெளியிலிருந்து பெறப்பட்டதாகவே தெரிகிறது.

'ஃபாயரி' என்பவர் சிந்து நாகரிகத்தின் காலம் கி.மு. 2800 — 2500 எனக் கருதுகிறார். 'வீலரின்' மதிப்பினபடி அது கி.மு. 2300 — 1500 ஆகும். அதாவது சிந்து நாகரிகத்தின் முடிவும், ஆரியர்களின் வருகையும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

ஆரியர்கள் எப்படிப்பட்ட நாகரிகத்தையும், பௌதீக வாழ்க்கையும் அழித்திட முயற்சித்துள்ளார்கள் என்பதைப் பார்த்தோம். உண்மையில் குதிரையைத் தவிர வேறெந்தப் புதிய பொருளையும் அவர்கள் தரவில்லை. மொகஞ்சோதாரோ, ஹாரப்பா போன்ற எத்தனையோ அழித்துவிட்ட பின்னர், மாடு மேய்ப்போரான ஆரியர் வெற்றி கொண்ட சப்த சிந்து பிரதேசத்தைத் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு, அதை மேய்ச்சல் நிலமாக மாற்றிவிட்டனர். பல நகரங்கள் மனித சஞ்சாரமற்றுப் போய்விட்டன. கிராமப்புறங்களைச் சேர்ந்த பெரும்பாலான மக்களும் கிழக்கையும், தெற்கையும் நோக்கி ஓடிப்போய்விட்டனர். எஞ்சியிருந்தவர்களை வெற்றி பெற்றவர்கள் அடிமைகளாகவோ, கூலிக்காரர்களாகவோ ஆக்கிக் கொண்டுவிட்டனர்....

(ஆரியர்கள் இந்திய உப கண்டத்தைக் கைப்பற்றுவதற்கு முன்னர் மொகஞ்சோதோரோவிலும், ஹராப்பாவிலும் நிலவிய உயர்ந்த புராதன மனித வாழ்வையும் நாகரிகத்தையும் சித்தரிக்கும் இக்கட்டுரை, பேரறிஞர் ராகுல சங்கிருத்தியாயன் அவர்களினால் எழுதப்பட்ட 'ரிக் வேத கால ஆரியர்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதின் ஒரு பகுதியாகும். இந்த நூல் என்சிபிஎச் வெளியீடாகும்) *

---

"இருள் இருள் என்று சொல்லிக் கொண்டு சும்மா இருப்பதை விட ஒரு சிறிய மெழுகுவர்த்தியை ஏற்றி வை."

"நன்றாக ஆளப்படக்கூடிய நாட்டில் வறுமை என்பது வெட்கப்பட வேண்டிய விடயம். மோசமாக ஆளப்படக்கூடிய நாட்டில் செல்வம் என்பது வெட்கப்பட வேண்டிய விஷயம்."

"கொஞ்சம் வைத்திருப்பவன் ஏழையல்ல. அதிகம் விரும்புகிறவன் தான் ஏழை."

"நமக்கு எதையெல்லாம் பிறர் செய்யக்கூடாது என்று நினைக்கிறோமோ, அதையெல்லாம் நாம் பிறருக்குச் செய்யக் கூடாது."

**- கன்பூசியஸ்**

# தமிழ் தலைமைகளின் துரோக அரசியல் வரலாறும் மீண்டும் தோன்றியிருக்கும் இணக்க அரசியல் ஞானமும்!

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் பெயருக்கு 5 கட்சிகள் இருந்தாலும் அதை வழி நடாத்துபவர்களும், தீர்மானம் எடுப்பவர்களும் 'மும்மூர்த்திகள்' தான். அவர்கள் மூவரும் கூட்டமைப்பில் ஆதிக்கம் வகிக்கும் பெரிய கட்சியான தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அதில் ஒருவர் இரா.சம்பந்தன். இன்னொருவர் மக்களால் தெரிவு செய்யப்படாத தேசியப் பட்டியல் (பின்கதவு) பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன். மூன்றாமவர் வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

இந்த அணியில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஏன் விடுபட்டுப்போனார் என்ற கேள்வி பலருக்கு எழலாம். மாவையின் சொல்லையும் செயலையும் பார்ப்பவர்கள் அவர் பெயருக்குத்தான் தலைவராக இருக்கிறார் என்ற கருத்தைக் கொண்டிருப்பதால், அவரை விட்டுவிடுவோம். அதற்கு ஒரு காரணம் மற்றைய மூவருக்கும் இருக்கும் 'தராதரங்கள்' மாவைக்கு இல்லை என்பதும் பலரின் கருத்து.

முன்குறிப்பிட்ட மூவரும் கடந்த இரண்டு மாதங்களாக ஒரு புதிய வார்த்தையைப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள். அது வேறொன்றும் இல்லை, 'இணக்க அரசியல்' என்ற வார்த்தைதான். இவ்வருடம் ஜனவரி மாதம் 08ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடந்து, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பரம வைரியான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தோற்கடிக்கப்பட்டு, எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவாகி, கூட்டமைப்பினருக்கு மிகவும் பிடித்த ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி அமைத்ததும்தான்,



கூட்டமைப்பினருக்கு இணக்க அரசியல் என்ற வார்த்தை ரொம்பவும் பிடித்துப்போய்விட்டது.

இதற்கு முன்பும்கூட, பல வருடங்களாக காலத்துக்காலம் சில தமிழ் அரசியல் தலைவர்கள் இணக்க அரசியல் பற்றிப் பேசியும், செய்தும் வந்திருக்கிறார்கள். உதாரணமாக முன்னாள் யாழ்.மாநகர முதல்வர் அல்பிரட் துரையப்பா, நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் சி.அருளம்பலம், வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் ஆ.தியாகராசா, பொத்துவில் பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் ஆ.தங்கத்துரை, மட்டக்களப்பு சாம் தம்பிமுத்து, சிறிலங்கா சுதந்திரக் கட்சி யாழ்.மாவட்ட அமைப்பாளர் கு.வினோதன் என அப்பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

ஆனால் அப்பொழுது இணக்க அரசியல் பேசிய இவர்களை எல்லாம் முன்னர் தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பனவும், பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் "துரோகிகள்" என வர்ணித்ததுடன், அவர்களுக்கு இயற்கை மரணம் கிடையாது எனவும் கூறி, தமிழிளைஞர்களுக்கு உசுப்பேத்தி அவர்களில் பலரை புலிகள் கொலை செய்வதற்கு வழிவகுத்தனர்.

இணக்க அரசியல் பேசியவர்களில் ஆகப்பிந்திய தமிழ் அரசியல் தலைவர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா. அவரையும் துரோகி என இந்தத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வர்ணித்ததுடன், அதன் காரணமாக புலிகள் அவரை சுமார் 9 தடவைகள் கொலை செய்வதற்கும் எத்தனித்தனர். ஆனால் இன்று வடக்கு தமிழ மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிப்பதற்கு முன்னைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துடனும், அவ்வரசின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுடனும் இணைந்து பெரும் பணியாற்றிய பெருமை ஈ.பி.டி.பி கட்சிக்குத்தான் உரியது என்பதை, தலைகீழாக நின்றாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் மறுக்க முடியாது.

**சுப்பராஜன்**

சரி இவையெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இந்த மும்மூர்த்திகளுக்குத் தோன்றிய இந்த புதிய 'இணக்க அரசியல்' நிரந்தரமாக நின்று பிடித்து, அதன் மூலம் தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை விளையுமா என்பதையும் பார்த்துவிடுவது நல்லது. ஏனெனில் இன்று இவர்கள் பேச ஆரம்பித்திருக்கும் இணக்க அரசியல் இன்றைய தலைமுறைத் தமிழ் மக்களுக்கு புதுமையாகவும், ஆச்சரியமானதாகவும், சில வேளைகளில் நம்பிக்கை அளிக்கக்கூடியதாகவும் இருக்கும். ஆனால் இவர்களின் முன்னைய தலைமைகளினதும், தற்போதைய தலைமையினதும், அரசியல் வரலாற்றை அறிந்தவர்களுக்கு இவர்களின் தற்போதைய இணக்க அரசியல் என்பது ஒரு 'புருடா' என்பது தெளிவாக விளங்கும்.

உண்மையில் தமிழ் முதலாளித்துவத் தலைமைகளின் வரலாற்றை எடுத்துப் பார்த்தால், அவர்கள் எப்பொழுதெல்லாம் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பதவிக்கு வருகின்றனவோ அப்போதெல்லாம் ஆவேசமாக இன விடுதலைப் போராட்டம் நடாத்துவதும், ஐ.தே.க. அரசாங்கம் பதவிக்கு வந்தால் தமது போராட்டங்களை எல்லாம் கைவிட்டு அந்த அரசுடன் கூடிக்குலாவி இணக்க அரசியல் செய்வதும், ஒரு தொடர்ச்சியான நடைமுறையாக இருந்து வந்துள்ளதைக் காணலாம்.

மற்றவர்களைத் துரோகிகள் என்று குற்றம் சாட்டும் இவர்கள்தான் தமது வரலாறு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிரான துரோக அரசியல் செய்திருக்கிறார்கள்.

- சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் ஐ.தே.கவின் டி.எஸ்.சேனநாயக்க தலைமையில் அமைந்த போது அதில் அகில தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவரான ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு அமைச்சரானார். (அப்பொழுது எஸ்.ஜே.வீ.செல்வநாயகம், கு.வன்னியசிங்கம், ஈ.எம்.வி.நாகநாதன் எல்லோரும் அக்கட்சியில்தான் இருந்தனர்) அந்த அரசு திட்டமிட்டு தமிழ் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்ததுடன், இந்திய வம்சாவழி தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்தது. இந்த நடவடிக்கையை பொன்னம்பலமும் அவரது கட்சியும் ஆதரித்து வாக்களித்தன.
- 1957இல் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பண்டாரநாயக்கவும் செல்வநாயகமும் ஒப்பந்தம் செய்தனர். அதை எதிர்த்து ஐ.தே.க ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் 'கண்டி யாத்திரை' செய்து ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைத்தது. அந்தச் சந்தர்ப்பத்தில் சிங்கள இனவாதிகளுக்கு எதிராக பண்டாரநாயக்கவின் கைகளைப் பலப்படுத்த வேண்டிய தமிழரசுக் கட்சி தேவையில்லாமல் சிங்கள சிறீ எதிர்ப்புப் போராட்டத்தை நடாத்தி இனவாதிகளுக்குத் தீனி போட்டது.
- சமஸ்டி கொள்கையே தமது கொள்கை எனக் கூறிவந்த தமிழரசுக் கட்சி 1965 தேர்தலின் பின்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நிபந்தனையுடன் ஆதரவளித்து தமிழர் பிரச்சினையில் சிலவற்றைத்தானும் தீர்ப்பதற்கு இருந்த வாய்ப்பை நிராகரித்துவிட்டு, கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜீ.சேனநாயக்க போன்ற தீவிர சிங்கள இனவாதிகளுடன் சேர்ந்து டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க அரசில் பங்கேற்று ஒன்றுமில்லாத வெறும் 'மாவட்ட சபைகள்' பெறப்போவதாகச் சொல்லி, பின்னர் அதுவுமில்லாமல் ஏமாந்த வரலாறு எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.
- 1976இல் வட்டுக்கோட்டையில் மாநாடு கூடி 'தனித் தமிழ் ஈழம் ஒன்றே இனித் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு' என்று அறிவித்துவிட்டு, பின்னர் 1977இல் ஜே.ஆர்.தலைமையில் ஐ.தே.க அரசு அமைந்த போது அதனுடன் கூடிக்குலாவி அதிகாரமற்ற 'மாவட்ட அபிவிருத்தி சபைகள்' என்ற ஏமாற்றுக்குச் சம்மதித்து இறுதியில் அதுவும் இல்லாமல் போன வரலாறும் இதே தமிழ் தலைமைக்கு உண்டு.
- இலங்கையின் சுதந்திர தினத்தையும், அதன் சிங்கக் கொடியையும் புறக்கணிக்கிறோம் என கடந்த 60 ஆண்டுகளுக்கும் மேலாகச் சொல்லி வந்த தமிழ் தலைமை, அதைக் கைவிட்டு சம்பந்தன் ரணிலுடன் கைகோர்த்து சிங்கக் கொடி பிடிக்கவும், இவ்வருட சுதந்திர தின விழாவில் ஐ.தே.க அரச பிரதிநிதிகளுடன் வீற்றிருக்கவும் வழி வகுத்திருக்கிறது.
- புலிகளுடனான இறுதிப் போரின் போது முள்ளிவாய்க்காலில் பல்லாயிரக்கணக்கான தமிழர்களை இலங்கை அரச படைகள் 'இனப்படுகொலை' செய்ததாகக் குற்றஞ்சாட்டிய தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அதற்கான முழுப்பழியையும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச மீது சுமத்திவிட்டு, 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது அந்த யுத்தம் முழுவதையும் களத்தில் நின்று வழிநடாத்திய முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகவை வெளிப்படையாக ஆதரித்தது.
- அதேபோல மகிந்த அரசில் 10 வருடங்களாக முக்கிய அமைச்சராகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலராகவும், இறுதி யுத்த நேரத்தில் மகிந்த நாட்டில் இல்லாத நேரத்தில் 2 வாரங்கள் நாட்டின் பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை இவ்வருடம் ஜனவரி 08ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் கூட்டமைப்பு ஆதரித்தது.

இவ்வாறாக தமது வரலாறு முழுவதும் மற்றைய தமிழ் அரசியல்வாதிகள் அல்ல, இந்தப் பிற்போக்குத் தமிழ் தலைமைகளே தமிழ் மக்களுக்கு எதிராகத் துரோகம் செய்து வந்திருக்கிறார்கள். இவர்கள் உண்மையான தமிழ் தேசியவாதிகள் அல்லர். இவர்கள் ஏகாதிபத்திய சக்திகளின் சிங்களப் பிரதிநிதிகளாக ஐ.தே.க இருப்பது போல, இவர்கள் அதே ஏகாதிபத்திய சக்திகளின் தமிழ் பிரதிநிதிகள் என்பதே உண்மை. அதனால்தான் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான அரசுகள் பதவிக்கு வந்தால் எதிர்ப்பு அரசியல் நடாத்துவதும், ஏகாதிபத்திய சார்பு ஐ.தே.க அரசு பதவிக்கு வந்தால் அதனுடன் கூடிக்குலாவி இணக்க அரசியல் நடாத்துவதுமாக இருக்கிறார்கள்.

தற்போது இவர்கள் பேசத் தொடங்கி இருக்கும் இணக்க அரசியலும் இந்த வகையானதுதான். ஏனெனில் இவர்களது வர்க்க சகபாடியான ஐ.தே.க இப்பொழுது ஆட்சிக்

**தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க..**

# ஜனாதிபதித் தேர்தலும் சில பிரதிபலிப்புக்களும்!




"ஆட்டுவித்தால் யாரொருவர்
ஆடாதாரே கண்ணா
ஆசை என்னும் தொட்டிலிலே
ஆடாதாரே கண்ணா
நீ நடத்தும் நாடகத்தில் நானும்
உண்டு – என் நிழலிற்கூட
அனுபவத்தில் சோகம் உண்டு
பகைவர்களை நானும் வெல்வேன்
அறிவினாலே – ஆனால்
நண்பரிடம் தோற்றுவிட்டேன்
பாசத்தாலே."

ஒருவேளை மஹிந்த ராஜபக்ஷா தமிழராய்ப்பிறந்து, தமிழ்ச்சினிமாவின் ரசிகராகவிருந்து, சாய்மனைக் கதிரையில் அமர்ந்தபடி ஒரு கணம் தோல்வியை எடை போட்டிருப்பாராயின் இந்தப்பாடலைத் தவிர்த்து வேறெந்தப் பாடலைத்தான் பாடியிருப்பார்? சிலவேளை 'நாலுபேரு நடுவிலே நூலு ஒருத்தன் கையிலே' என்றும் பாடியிருப்பாரோ? யாருக்குத் தெரியும்?.

எது எவ்வாறிருப்பினும் ராஜபக்ஷாவின் தோல்விக்கு கட்சி உடைக்கப்பட்டமையும், அணியில் அங்கம் வகித்த கட்சிகள் பிரிந்து சென்றமையும், அவரது உள்நாட்டு அரசியல் அணுகுமுறையுமே காரணங்களாகும். சிறுபான்மை இனங்களின் மதவுரிமைகளைப் பாது காக்காமையும் (பள்ளிவாசல்கள், தேவாலயங்களைத் தாக்கியவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்தாமை) இந்தியா மற்றும் வெளிநாடுகளுக்குச் சார்பாக ஜால்ரா போடாமையும், அல்லது அவர்களின் தாளத்திற்கு ஆட்டம் பிசகியமையும் காரணங்களாகக் கூறலாம். பலம் வாய்ந்த வெளிநாடுகள் உலகின் எந்த திட்டுக்களிலும், மூலை முடுக்குகளிலும் உள்ள சிறிய, பெரிய நாடுகள் தமக்குச் சார்பாக வரும்வரை, தமக்குச் சார்பான பொம்மையரசுகளை உருவாக்கும்வரை இமைப்பொழுதும் சோராமல் இருப்பார்களென அரசியல் விமர்சகர்கள் கூறுவது இலங்கைக்கும் பொருந்திவிட்டதோ தெரியவில்லை.

இனியும், தமிழ்மக்களின் வாக்குகள் ராஜபக்ஷாவிற்குக் கிடைக்குமென்று சொல்வதற்கில்லை. மேட்டுக்குடித் தமிழ்த்தலைமைகளான கூட்டமைப்பும், புலம்பெயர் முன்னணி அமைப்புக்களும் அதற்கு இடம் கொடுக்கப் போவதில்லை. ராஜபக்ஷவிற்கெதிராக, இராணுவத் தளபதியாகவிருந்த சரத்பொன்சேகாவோ, அல்லது பௌத்தவாத வெறிபிடித்த பொதுபலசேனாவிலிருந்து ஒரு மதகுரு நிறுத்தப்பட்டிருந்தாலும், தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டுமென அவர்களையே தெரிவு செய்வார்கள். ஏன் மைத்திரி சிறிசேனகூட யுத்தத்தின் இறுதி இரண்டு வாரங்களுக்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த சமயத்திலேயே கொத்துக் குண்டுகள் போடப்பட்டதாகவும், இவர் புலிகளின் தாக்குதல் முயற்சிகள் பலவற்றிலிருந்து தப்பிப்பழைத்தவராகவும் கூறப்படுகிறது. சரத்பொன்சேகா போல.

ஆனந்ததேவன்

மனித உயிர்களின் அழிவுகள்பற்றி அக்கறைப்படாத, தனிநபர் பயங்கரவாதத்தையும், சுத்தராணுவக் கண்ணோட்டத்தையும், சாரமாகக் கொண்டதே புலித்தலைமையின் போராட்டம். சாத்தியமற்ற இலக்கையடைவதற்காக, சதா சாவையே வாழ்வாகக் கொண்ட யுத்தத்தை நடாத்திய புலித்தலைமையைத் தோற்கடித்த ஆளுமை ராஜபக்ஷாவையே சாரும். இதன்மூலம் நீண்டகால நோக்கில் இலங்கை என்ற நாட்டை மட்டுமல்லாது அந்தப் பிராந்தியத்திற்கான(ஆசியா) பிரிவினைவாத ஊற்றுமூலத்தை அழித்த ஆளுமை ராஜபக்ஷாவிற்கு உரியது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படி கூட்டமைப்பு ஒருபோதும் புலித்தலைமையை வற்புறுத்தியது கிடையாது. வற்புறுத்தாத இந்தத் தமிழ்த் தலைமை யுத்தத்தில் வெற்றிகொண்ட ராஜபக்ஷாவை ஒரு போதும் ஆதரிக்கமாட்டாது. யுத்தத்தின் வடுக்கள், வலிகள், அழிவுகள் போன்றவற்றிற்கு, 1995இல் யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை மந்தைகள் போன்று பலாத்காரமாக அழைத்துவந்து கேடயமாகப் பயன்படுத்திய புலித்தலைமையும் காரணமென்று ஒரு போதும் தமிழ்மக்களுக்குச் சொல்லப் போவதில்லை. சுயவிமர்சனம் செய்யப் போவதுமில்லை. அவர்கள் உள்நாட்டிலுள்ள தமிழ்மக்களின் நலன்களைவிட புலம்பெயர்ந்த நாடுகளிலுள்ள முன்னணி

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க..

# லிங்கன் பற்றி 15,000 நூல்கள்!

அமெரிக்காவின் 16ஆவது ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம் லிங்கன் பற்றி அறியாதவர்கள் எவரும் இல்லை எனலாம். அவருக்கு ஏற்பட்ட அமோகமான புகழுக்குக் காரணம் அமெரிக்காவில் நீண்ட காலமாக நடைமுறையில் இருந்து வந்த கறுப்பு இன மக்களுக்கு எதிரான சட்டபூர்வமான அடிமை முறையை அவர் நீக்கியமையே. அவரது அந்த முயற்சியே அவருக்கு எமனாகவும் மாறியது.

லிங்கன் துப்பாக்கிதாரி ஒருவனால் அவரது காரியாலயத்தில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட போது அவரது வயது 56 மட்டுமே. 1865 ஏப்ரல் 14ஆம் திகதி அவர் தலையில் சுடப்பட்டார். மறுநாள் உயிரிழந்தார்.6 அடி 4 அங்குலம் உயரமான லிங்கன் எவரையும் இலகுவில் கவரக்கூடிய வசீகரத் தோற்றம் உள்ளவர். அவர் இறந்த பின்னர் அவரைப் பற்றி உலகம் முழுவதும் 15,000 நூல்கள் வெளிவந்துள்ளன.

# 109 வயது மூதாட்டியின் உடல் ஆரோக்கிய இரகசியம்!

உலகில் அதிகமான வயதுடன் வாழ்ந்து வருபவர்களில் ஒருவரான ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த Jessie Gallan என்ற பெண்மணி தனது 109ஆவது பிறந்த நாளை இவ்வருடம் ஜனவரி 2ஆம் திகதி நல்ல ஆரோக்கியத்துடன் கொண்டாடியுள்ளார்.

அவர் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. அவரது நல்ல உடல் ஆரோக்கியத்துக்கான காரணம் குறித்துக் கேட்ட பொழுது, தான் ஆண்களை விட்டு விலகி இருப்பதும், தினமும் காலையில்




மிதமான சூட்டில் ஒரு கிண்ணம் கஞ்சி சாப்பிடுவதும், தேகப்பயிற்சி செய்வதும்தான் அதன் இரகசியம் என்று கூறியுள்ளார்.

ஆண்களைப் பற்றிக் குறிப்பிட்ட அவர், இப்பொழுதெல்லாம் அவர்களால் பயன் கிடைப்பதை விடப் பிரச்சினைகள் தான் அதிகம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
தகவல்: Daily Telegraph

# மூளை இருக்கே!

உலகத்திலேயே, ஏன் பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களிலேயே மனித மூளைதான் மிகவும் புத்திக்கூர்மை கொண்டது.

நமது மூளை எல்லா நேரமும் வேலை செய்து கொண்டே இருக்கிறது. ஒரு மனித மூளைக்குள் ஒரு நாளில் சராசரியாக 70,000 எண்ணங்கள் ஓடுகின்றன. தூங்கும் போதுதான் மூளை அதிகமாக வேலை செய்கிறதாம். கனவும் அதன் ஒரு பகுதிதான்.

மனித மூளையில் 60 சதவிகிதம் கொழுப்பு இருக்கிறது என்றாலும் அது கடுமையாக வேலை செய்கிறது. மூளை 25 வாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

மூளை என்ற உறுப்புக்கு நேரடியாக வலி அறியும் உணர்வு இல்லை. அதனால், ஒரு மனிதன் விழித்திருக்கும் போதே கூட அவரது மூளையில் அறுவை சிகிச்சை செய்ய மடியும்.
நன்றி: மங்கையர் மலர்

# டெமென்சியா

தொடர்ந்தேச்சியான மூளைத்திறன் தேய்வே Dementia ஆகும். சிந்திக்கும் ஆற்றலில் ஏற்படும் பாதிப்பு, சற்றுமுன்னர் செய்த வேலையை மறத்தல், மொழிவெளிப்பாட்டில் ஏற்படும் இடர்பாடு, உடல் அசைவியக்கத்தில் ஏற்படும் தாமதம், திக்குத்திசை தெரியாது தடுமாறுதல், மனதை ஒருமுகப்படுத்த முடியாமை, தீர்மானம் எடுக்கும் ஆற்றல் குறைவடைந்து போதல், மனஉளைச்சல், புலனுணர்வுகளில்(கேட்டல், பார்த்தல், சுவைத்தல்..) ஏற்படும் மாற்றங்கள் என்பன இவற்றின் அறிகுறிகளாகும்.

முதுமை, பாரிசவாதம், மண்டை அடிபடுதல், அன்பு கிடைக்காமை, குடும்பச்சச்சரவு, பயங்கொள்ளித்தனம், மாதவிடாய்க்கோளாறு, தனிமையில் இன்பங்காணுதல் என்பன இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

மொத்தத்தில் இலத்தீன் சொல்லான Dementia வை, தமிழில் 'அறளை பெயர்தல்' என்று சொல்லலாம். De என்பது தேய்வடைதலையும், Mens என்பது புரிதலையும் குறிக்கும். உலகளாவியரீதியில் 44 மில்லியன் மக்கள் இந்நோயுடன் வாழ்ந்து வருவதாகவும், இந்நோய் ஆகக்குறைந்தது 40 வயதிலும் ஏற்படலாம் என்றும், குணப்படுத்தமுடியாத நோயாகவும் கருதப்படுகிறது. நோய்க்கு ஏதுதான் வயது?.

## ஒரு வருடம்

சனிக்கிரகத்தில் 10759 நாட்கள் ஒரு வருடம்.
வியாழனில் 4331 நாட்கள் ஒரு வருடம்.
செவ்வாயில் 687 நாட்கள் ஒரு வருடம்.
பூமியில் 365 நாட்கள் ஒரு வருடம்.
வெள்ளியில் 227 நாட்கள் ஒரு வருடம்
புதனில் 88 நாட்கள் ஒரு வருடம்.

## ஏழு கோடி இருந்து என்ன பயன்?

தமிழகத்தில் 2011இல் எடுத்த ஒரு சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி, அங்கு 7.11 கோடி மக்கள் வாழ்கிறார்கள் எனத் தெரிய வந்துள்ளது. இப்பொழுது அந்தத் தொகை மேலும் அதிகரித்திருக்க வாய்ப்புள்ளது.

சுமார் 15 இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு ஒரு தனிநாடு வேண்டும் என கூக்குரல் போடும் தமிழக அரசியல்வாதிகள், தமது ஏழு கோடிக்கு மேற்பட்ட தமிழர்களுக்கு ஒரு தனி நாடு வேண்டும் எனக் கோராமலும், போராடாமலும் இருப்பது, விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

இலங்கைத் தமிழன்தான் தமிழக அரசியல்வாதிகளுக்குக் கிடைத்த இழிச்ச வாயனோ என்னவோ?

## தாம்பூலம் தரிப்பது நன்மையா?

தாம்பூலம் போடும் பழக்கம் தொன்றுதொட்டு இருந்து வரும் ஒன்றாகும். தாம்பூலத்தில் வெற்றிலையே கதாநாயகன். வெற்றிலை புராதன காலம் தொட்டு மருத்துவப் பொருளாக மட்டுமின்றி, மங்கலப் பொருளாகவும் கருதப்பட்டு வருகிறது. தெய்வங்களுக்குப் படைப்பது, பெரிய மனிதர்களைச் சந்திக்கும் போது கொடுத்துப் பரிமாறிக் கௌரவிப்பது என வெற்றிலை பல மங்கலகரமான காரியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

இந்த வெற்றிலையில் கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, விற்றமின் பி, விற்றமின் சி ஆகிய சத்துகள் அடங்கியுள்ளன. அந்த இரகசியத்தை அறிந்துதான் நம்மவர்கள் அதை உமிழத் தொடங்கினார்களோ என்னவோ?

இந்த வெற்றிலைக்கு இலங்கையில் ஒருமுறை தட்டுப்பாடு வந்தபோது, இன்று அங்கு பிரதமராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க, "வெற்றிலைக்குப் பதிலாக சுவிங்கம் சாப்பிடுங்கள்" என நாட்டு மக்களுக்குச் சொல்லி தனது அதி மேதாவித்தனத்தைக் காட்டிக் கொண்டார்!

## சீனத்தின் இன்னோரு அதிசயம்!

உலகின் மிகப்பெரிய கண்காட்சி நிலையம் ஒன்றை சீனா அதன் வர்த்தக நகரான சாங்காயில் நிர்மாணித்து வருகிறது. இந்த நிலையத்தில் 5 இலட்சம் சதுர மீட்டர் பரப்பளவு இடம் கண்காட்சி மண்டபங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 80,000 சதுர மீட்டர் பரப்பளவு இடம் கருத்தரங்க மற்றும் காரியாலய கட்டிடங்களுக்கும், 1,50,000 சதுர மீட்டர் பரப்பளவு வர்த்தக நிலையங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## நாட்டுப் புலியும் காட்டுப் புலியும்!

நம்மில் பலருக்கு நாட்டுப் புலியைப் பற்றி அனுபவம் உண்டு. இது காட்டுப் புலியைப் பற்றிய ஒரு கதை.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் ஜெர்மானிய சர்வாதிகாரி ஹிட்லர் பல ஐரோப்பிய நாடுகளைக் கபளீகரம் செய்தான். அவனது சப்பாத்தின் கீழ் நசுங்கிய நாடுகளில் சின்னஞ்சிறிய அப்பேனியாவும் ஒன்று.

ஒரு சமயம் அந்த நாட்டிலுள்ள ஒரு கிராமத்துக்குள் ஹிட்லரின் நாஜிப்படைகள் நுழைந்தபோது மக்கள் திக்குத்திசை தெரியாது ஓடி காடுகளிலும் மலைகளிலும் பதுங்கிக் கொண்டனர். அவ்வாறு கைக்குழந்தையுடன் ஓடிய ஒரு பெண் ஒரு மலைக்குகைக்குள் தஞ்சம் புகுந்தாள். உள்ளே நுழைந்த பின்தான் தெரிந்தது அது ஒரு புலிக்குகை என்பது. மூன்று புலிக்குட்டிகள் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்தன. தாய்ப்புலி எங்கோ இரை தேடப் போயிருந்தது.

இரை தேடப்போன புலி எந்த நேரமும் வரலாம், தன்னையும் குழந்தையையும் அடித்துக் கொன்று புசிக்கலாம் என்பது அவளுக்குப் புரிந்தது. இருந்தாலும் கொடுங்கோலன் ஹிட்லரின் படைகளின் கைகளில் அகப்படுவதை விட, புலியினால் கொல்லப்பட்டால் பரவாயில்லை என எண்ணி அவள் குகைக்குள்ளேயே அமைர்ந்திருந்து தனது பசித்த பிள்ளைக்குப் பால் கொடுக்கத் தொடங்கினாள்.

வெளியே போன புலி குகைக்குத் திரும்பிய போது அந்நியக் காலடியையும், வாசனையையும் உணர்ந்து உறுமிக்கொண்டு குகைக்குள் பாய்ந்து வந்து சுற்றுமுற்றும் பார்த்தது. பெண் ஒருத்தி குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டதும் அதனது சீற்றம் அடங்கிப் போனது. மெதுவாக நடந்துபோய் தனது குட்டிகளுக்குப் பால் கொடுக்கத் தொடங்கியது.

(இந்தக் கதை, அல்பேனியா ஒரு சோசலிச நாடாக இருந்த காலத்தில் அந்நாட்டிலிருந்து வெளியான New Albania என்ற மாத சஞ்சிகையில் வெளியான கற்பனை கலந்த ஒரு கதையின் சுருக்கமாகும்)

---

"ஒரு புது உலகுக்காக போரிடுவோம். அனைவருக்கும் வேலை கொடுக்கும் ஒரு பண்பட்ட சமுதாயத்திற்காக போரிடுவோம். நல்ல எதிர்காலத்தையும் , பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காக போரிடுவோம். இதே போன்ற முழக்கத்தோடுதான் போலிகள் வருவார்கள். இதை நிறைவேற்றுவோம் என்று சத்தியம் செய்வார்கள். ஆனால் அவர்கள் சொன்னதெல்லாம் பொய். அந்த சத்தியங்களை அவர்கள் எப்பொழுதும் நிறைவேற்ற மாட்டார்கள். இவர்கள் தங்களை மட்டும் விடுவித்துக் கொண்டு மொத்த சமுதாயத்தையும் அடிமைப் படுத்துவார்கள்".

***The Great Dictator* (1940) என்ற திரைப்படத்தில் சார்லி சாப்ளின்**

# இடதுசாரிகளுக்கான காலம்

இலங்கையில் 2015 ஜனவரி 8-ல் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்று ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் அரசியல் அரங்கில் பல மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஜனாதிபதி தேர்தல் நிகழ்ச்சியும், அதன் பின்னரான புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் ஒரு திட்டமிட்ட சதி பாணியில் நடைபெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

முதலாவது சதி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளராகவும், முன்னைய மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில முக்கிய அமைச்சராகவும் இருந்த மைத்திரிபால சிறிசேனவை அங்கிருந்து பிரித்தெடுத்து எதிரணியின் பொது ஜனாதிபதி வேட்பாளராக்கியதில் ஆரம்பமானது.

இரண்டாவது சதி, 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் வெறுமனே 49 உறுப்பினர்களை மட்டுமே கொண்ட ஐக்கிய தேசிய கட்சியை அரசாங்கம் அமைக்க விட்டதில் நிறைவேறியது.

மூன்றாவது சதி, முன்னைய ஆட்சியின் ஆதரவாளர்களின் மீது வன்முறையைப் பிரயோகிப்பதிலும், அவர்கள் பலரின் மீது பலவிதமான அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளை (வழக்குகள் உட்பட) மேற்கொள்வதிலும் அரங்கேறி வருகிறது.

இவையெல்லாவற்றையும் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இன்றைய சட்டவிரோத அரசாங்கத்தின் உதவியுடன் புதிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நிறைவேற்றி வருகிறார்.

ஆனால் இவையெல்லாவற்றையும் விட மிக முக்கியமான விடயம், சிறீலங்கா சுதந்திர கட்சியை பிளவுபடுத்தி சின்னாபின்னமாக்குவதற்கு எடுத்துவரும் முயற்சியாகும். மைத்திரி சிறீ.ல.சு.கட்சிக்கு துரோகம் இழைத்து, ஐ.தே.கவுடன் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டவுடனேயே அவருக்கு அக்கட்சியுடன் இருந்து வந்த உறவு அற்றுப்போய்விட்டது. ஆனால் அக்கட்சியின் யாப்பையும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையையும் பயன்படுத்தி அவர் கட்சியின் தலைவராகி அதைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதுடன், கட்சிக்காக கடந்த காலங்களில் உண்மையாக உழைத்தவர்களை ஓரம் கட்டவும் முயற்சிக்கிறார்.

## சேவற்கொடியோன்

சிறீலங்கா சுதந்திர கட்சியை அழிக்கும் இந்த நடவடிக்கை வெறும் அதிகார போட்டியோ அல்லது உள்நாட்டு விடயமோ அல்ல. இது நன்கு திட்டமிடப்பட்ட ஒரு சர்வதேச சதி ஆகும். ஏனெனில் ஒரு காலத்தில் இலங்கையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான சக்திமிக்க அணியாக



இருந்த இடதுசாரிகள் பலவீனப்பட்ட பின்னர், அவர்களுடைய இடத்தை சிறீ.ல.சு.கட்சியே வகித்து வந்தது. அந்த கட்சி தலைமைதாங்கிய அரசுகள் எடுத்த ஏகாதிபத்திய விரோத நடவடிக்கைகள், முதலாளித்துவ விரோத நடவடிக்கைகள், நிலப்பிரபுத்துவ விரோத நடவடிக்கைகள் என்பவற்றால் பிற்போக்கு சக்திகள் அடிபட்ட பாம்பின் நிலையிலேயே இருந்து வந்தன.

அதிலும் குறிப்பாக மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் அவர் சர்வதேச ஏகாதிபத்திய விரோத சக்திகளுடன் உறுதியாகக் கைகோர்த்து நின்றதும், உள்நாட்டில் ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகளான ஐ.தே.கவை தலையெடுக்க விடாமல் தடுத்து வைத்திருந்ததும், ஏகாதிபத்தியத்தின் இன்னொரு கைக்கூலிகளான பாசிச புலிகளை பூண்டோடு ஒழித்துக் கட்டியதும், சர்வதேச பிற்போக்கு சக்திகளுக்கு பலத்த அடியாக இருந்தது. அதனால்தான் அவர்கள் கடந்த பல வருடங்களாக திட்டமிட்ட முறையில் இலங்கையில் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்து வந்து, அதில் வெற்றியும் பெற்றுள்ளனர். (இந்தியாவிலும் இந்துத்துவ மத பாசிச சக்தியான பாரதீய ஜனதா கட்சியின் மூலம் இதையே செய்தனர்)

தமது நோக்கத்தில் வெற்றி பெற்றாலும் மீண்டும் சிறீ.ல.சு.கட்சி ஆட்சிக்கு வரக்கூடிய 'அபாயம்' இருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அந்த சக்திகள் அவ்வாறு நிகழாமல் இருப்பதற்கு, அதன் அத்திவாரத்தையே தகர்க்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. அதன் வெளிப்பாடுதான் ஐ.தே.கவும் சிறீல.சு.கவும் சேர்ந்து 'தேசிய அரசாங்கம்' அமைப்பது என்ற திட்டமாகும். இதன் மூலம் இலங்கையில் வலுவான ஏகாதிபத்திய எதிர்ப்பு அணி ஒன்றை இல்லாதொழிப்பதும், இயல்பாகவே ஏகாதிபத்திய எதிர்ப்பை கொண்டிருக்கும் இலங்கை தேசியவாதத்தை இல்லாதொழிப்பதும், இடதுசாரிகளின் அடித்தளத்தை இல்லாதொழிப்பதும்தான் அவர்களது நோக்கம்.

ஆனால் ஐ.தே.கவுடன் தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு சிறீ.ல.சு.கட்சிக்குள்ளேயே எழுந்துள்ள எதிர்ப்பும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராக்க வேண்டும் என நடைபெற்று வரும் மக்கள் செல்வாக்கு பெற்ற இயக்கமும், பிற்போக்கு சக்திகளின் கனவுக்கு ஒரு தடையாக

அமைந்துள்ளது. மகிந்தவும் அவரது அரசாங்கமும் கடந்த ஆட்சிக்காலத்தில் பல பாரதூரமான தவறுகளை இழைத்திருந்த போதிலும், இன்றைய அரசாங்கம் போல அந்த அரசாங்கம் ஒரு தேசத்துரோக அரசாங்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. அதனால்தான் இன்று மகிந்தவை முன்னிறுத்தி முன்னெடுக்கப்படும் இயக்கம் என்பது அவர் மீதான தனிப்பட்ட விசுவாசத்தினால் மட்டுமின்றி, அவரை ஏகாதிபத்திய எதிர்ப்பினதும், உள்நாட்டு பிற்போக்கு எதிர்ப்பினதும் ஒரு குறியீடாக மக்கள் நோக்குவதாலேயே அவர் மீது மக்கள் நம்பிக்கை கொள்வதற்கு காரணமாக அமைந்துள்ளது.

இந்த இடத்தில்தான் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் அவசர அவசிய தேவை முன்னெப்போதையையும் விட அதிகமாக உணரப்பட வேண்டியுள்ளது. இலங்கையில் இடதுசாரிகளின் அரசியல் 1935-ல் சமசமாஜ கட்சியின் தோற்றத்துடன் ஆரம்பமானது. அவர்களே ஏகாதிபத்தியத்திடமிருந்து இலங்கையின் சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற நாட்டு மக்களின் இலட்சியத்துக்கு வடிவம் கொடுத்த முன்னோடிகள். ஆனால் அவர்களுக்குள் காலத்துக்காலம் சித்தாந்தரீதியாக ஏற்பட்ட பிளவுகளும், இலங்கையின் யதார்த்த சூழலை சரியாக விளங்கிக்கொண்டு அரசியலை முன்னெடுக்க தவறியதும் சேர்ந்து, அவர்களை பலவீனமடைய செய்துவிட்டது. குறிப்பாக 1953 ஆகஸ்ட் 12-ம் திகதி நடைபெற்ற அன்றைய ஐ.தே.க. அரசுக்கெதிரான வெற்றிகரமான மாபெரும் ஹர்த்தால் போராட்டத்தை சரியாக பயன்படுத்த தவறியதன் பின்னர், இடதுசாரிகளின் இடத்தை எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க முன்னின்று தொடங்கிய சிறீ.ல.சு.கட்சி எடுத்துக்கொண்டுவிட்டது.

அதன் காரணமாக இன்று இடதுசாரி கட்சிகள் தமக்கென சொந்த அரசியல் வேலைத்திட்டம், உறுதியான கட்சி ஸ்தாபன அமைப்பு, வெகுஜன அடித்தளம் என்பனவற்றை இழந்து நிற்கின்றன. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது இடதுசாரி கட்சிகளான கம்யூனிஸ்ட், சமசமாஜ கட்சி தலைமைகள் எடுத்த முடிவுகளுக்கு மாறாக அக்கட்சிகளின் ஒரு பிரிவினர் எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்த நிலைமை இடதுசாரிகளின் உறுதியற்ற தன்மைக்கு ஒரு உதாரணமாகும். அந்த நிலைமை ஏற்பட்டுள்ள பாரதூரமான நோயின் ஒரு வெளிப்பாடாகும்.

ஆனால் 'மரம் ஒய்வை விரும்பினாலும் காற்று அதை ஒய்ந்திருக்க விடாது' என்ற ஒரு சீன பழமொழி சொல்வது போல, இடதுசாரிகளையும் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலவரங்கள் ஓய்ந்திருக்க விடப்போவதில்லை. அதிலும் குறிப்பாக ஏகிதிபத்திய — பிற்போக்கு சக்திகள் சிறீ.ல.சு.கட்சியை சீர்குலைக்க முயன்றுவரும் இன்றைய சூழலில் இடதுசாரி கட்சிகளுக்கு முக்கியமான வரலாற்று பணி காத்துக் கிடக்கிறது. இன்னும் சொல்லப்போனால், இன்றைய சூழல் இடதுசாரிகள் தமது தவறுகளிலிருந்து மீண்டெழுவதற்கான ஒரு சந்தர்ப்பம் என்றும் சொல்லலாம்.

சிறீ.ல.சு.கட்சி அரசியல் ரீதியாகவும், ஸ்தாபனரீதியாகவும், குழப்பமான ஒரு சூழ்நிலையில் இருப்பதால், இடதுசாரி கட்சிகள் நாட்டு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்பு, பிற்போக்கு எதிர்ப்பு, ஜனநாயக போராட்டத்துக்கான தலைமையை வழங்குவதற்கு தம்மை தயார் செய்ய வேண்டிய வரலாற்று சூழல் எழுந்துள்ளது. அதை செய்வதற்கு அவர்கள் தம்மை முதலில் தயார் செய்ய வேண்டும். அதாவது அவர்கள்- தமது கட்சி அமைப்புகளை மீண்டும் கட்டுக்கோப்பானவையாக மாற்ற வேண்டும்.

கட்சிக்குள் சித்தாந்த — அரசியல் ஒருமைப்பாட்டை நிலைநாட்ட வேண்டும்.

உழைக்கும் மக்களின் மத்தியில் வேலை செய்து அவர்களின் வெகுஜன ஸ்தாபனங்களை உருவாக்கி மக்கள் ஆதரவை திரட்ட வேண்டும். பலவிதமான இடதுசாரி அணிகளுக்கிடையில் புரிந்துணர்வையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்த வேண்டும்.

ஏகாதிபத்தியத்தினதும் அதனது உள்ளூர் அடிவருடிகளினதும், நாட்டுக்கு எதிரான சதி நடவடிக்கைகளுக்கு எதிராக பரந்துபட்ட மக்களின் ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்க வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் வரலாறு இடதுசாரிகளுக்கு இட்ட கட்டளையாகும். வரலாற்றில் மீண்டுமொரு முறை ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தை இடதுசாரிகள் சரியான முறையில் இறுக பற்றுவார்களானால், அவர்களுக்கான ஒரு இடம் இலங்கையில் ஏற்பட வாய்ப்புண்டு. எனவே வரலாறு தயாராக உள்ளது. இடதுசாரிகள் அதற்கு தயாராக வேண்டும். *

---

மாகாளி பராசக்தி உருசிய நாட்
டினில் கடைக்கண் வைத்தாள், அங்கே,
ஆகாஎன் றெழுந்ததுபார் யுகப்புரட்சி,
கொடுங்காலன் அலறி வீழ்ந்தான்,
வாகான தோள்புடைத்தார் வானமரர்,
பேய்களெல்லாம் வருந்திக் கண்ணீர்
போகாமல் கண்புகைந்து மடிந்தனவாம்,
வையகத்தீர், புதுமை காணீர்!

**–பாரதியார்**

---

**6ம் பக்கத்தொடர்ச்சி…**

கட்டிலில் இருக்கிறது. தற்செயலாக அடுத்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்று (அதற்கான சாத்தியம் நிறைய இருக்கின்றது) ஆட்சி அமைத்தால் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் எதிர்ப்பு அரசியல் செய்ய ஆரம்பிப்பதை நிச்சயமாகக் காண முடியும்.

அதனால்தான் தமது இணக்க அரசியல் பற்றி அண்மையில் கருத்துத் தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், "நாம் சொல்லும் இணக்க அரசியல் மற்றவர்களுடையது போன்றது அல்ல" எனப் பொடி வைத்துப் பேசியிருக்கிறார். *

# கனடாவின் பல்கலாச்சார மகிமை பாதுகாக்கப்பட வேண்டும்

கனடாவின் ரொறன்ரோ நகரைச் சேர்ந்த முஸ்லிம் பெண் ஒருவர் நிஹாப் எனப்படும் முகத்திரை அணிந்து தனது கனடியப் பிரஜா உரிமை பெறும் நிகழ்வில் பங்கேற்பதற்கு பிரதமர் ஸ்ரீபன் கார்பரின் கொன்சவேர்டிக் அரசாங்கத்தின் அப்போதைய பல்கலாச்சார அமைச்சர் ஜேசன் கெனி அனுமதி மறுத்திருந்தார்.

இதனால் ஏமாற்றமும் அதிருப்தியும் அடைந்த அப்பெண் நிஹாப் அணியும் தனது உரிமையை அங்கீகரித்து தனக்கு நீதி வழங்கும்படி கோரி நீதிமன்றத்தை அணுகினார்.

அவரது மனுவை ஏற்று விசாரித்த சமஸ்டி நீதிமன்றம் பல்கலாச்சார அமைச்சரின் கொள்கை "நியாயமற்றது" (Unlawful) எனக் கூறி தீர்ப்பு வழங்கியுள்ளது.

இதற்கு முன்னரும் 2007இல் கொன்சவேர்டிக் கட்சி அரசாங்கத்தினர் முஸ்லிம் பெண்கள் நிஹாப் அணிந்து கொண்டு தேர்தல்களில் வாக்களிப்பதைத் தடை செய்ய முயன்றனர். ஆனால் அவர்களது முயற்சியை அப்போதைய தலைமைத் தேர்தல் அதிகாரி மார்க் மேரான்ட் நிராகரித்துவிட்டார்.

அவர் தனது நிராகரிப்புக்குச் சொன்ன காரணத்தில், சிறையில் இருப்பவர்கள் உட்பட சுமார் 70,000 பேர் தமது வாக்குகளை அஞ்சல் மூலம் அளிக்கையில் ஒருபோதும் தமது முகங்களைக் காட்டுவதில்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

உலகின் பல நாடுகளிலும் முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்குதலில் ஈடுபட்டு வருவதுடன், கனடாவிலும் அவ்வாறான இரண்டொரு சம்பவங்கள் நடந்துள்ளதால், கனடாவின் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக "முஸ்லிம் பயங்கரவாதம்" பற்றிய பிரச்சாரங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. ஒரு சிறிய குழுவினர் மேற்கொள்ளும் பயங்கரவாதச் செயல்களால் பல நாடுகளில் அப்பாவிகளான பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றனர். இதனால் கனடா உட்பட பல நாடுகளில் வாழும் சாதாரண முஸ்லிம் மக்கள் பெரும் இக்கட்டான நிலையிலும், மன உழைச்சல்களுடனும் வாழ்ந்து வருகின்றனர்.

கனடாவைப் பொறுத்தவரை ஏகப் பெரும்பான்மையான மக்கள் பல்கலாச்சாரத் தன்மையை ஏற்று சமாதானமாகவும், சகிப்புத்தன்மையுடனும் வாழ்வதையே விரும்புகின்றனர். சில ஐரோப்பிய நாடுகளில் உள்ளது போல கனடாவில் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ இன - மத - நிற - மொழி வேறுபாடுகளைப் பிரச்சாரம் செய்யவோ, நடைமுறைப்படுத்தவோ முடியாது. அப்படிச் செய்வது கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும். ஆனாலும் கனடாவில் வாழும் சில பகுதியினர் அவ்வாறான வேற்றுமைகளை இன்னமும் பின்பற்றுகின்றனர். தனிமனிதர்கள் அவ்வாறான எண்ணங்களைக் கொண்டிருப்பதை 'தனிமனித சுதந்திரம்' என்று நியாயப்படுத்துவதையே ஏற்க முடியாத நிலையில், அரசுகளே அவ்வாறு செய்வது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

உதாரணமாக, பிரெஞ்சு மொழி பேசும் மாகாணமான கியூபெக்கில் முன்னர் இருந்த 'புளொக் கியூபெக்குவா கட்சி' அரசாங்கம், "கியூபெக் பெறுமானங்கள் சாசனம்" (Quebec's Charter of Values) என்ற பெயரில் சட்டம் ஒன்றைக் கொண்டுவர முயன்றது. அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்திருந்தால், கியூபெக்கில் பொதுச் சேவைகளில் பணிபுரியும் முஸ்லிம் பெண்கள் நிஹாப், பர்தா என்பனவற்றை அணிய முடியாது, யூதர்கள் தமது சமய அடையாளமான தொப்பி அணிய முடியாது, சீக்கியர்கள் தலையில் டேர்பான் அணிய முடியாது போன்ற நிலைமைகள் ஏற்பட்டிருக்கும். ஆனால் அந்தச் சட்டத்துக்கு பல தரப்புகளிலிருந்தும் எதிர்ப்புக் கிளம்பியதுடன், தேர்தலில்



புளொக் கியூபெக்குவா கட்சி தோற்கடிக்கப்பட்டதால் அந்தப் பிரச்சினை தற்காலிகமாகத் தீர்ந்து போனது.

அதுமாத்திரமல்ல, கிட்டத்தட்ட சனத்தொகையில் 50 சதவிகிதம் குடிவரவாளர்கள் வாழும் ஒன்ராறியோ மாகாணத்தின் பிரதான நகரான ரொறன்ரோ மாநகரசபைக்கு கடந்த வருடம் தேர்தல் நடந்த போது, அங்கும் இனவாதம் தலைதூக்கியதைக் காண முடிந்தது.

அந்தத் தேர்தலில் காலஞ்சென்ற புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக் லேற்றன் அவர்களின் மனைவியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஒலிவியா சோ அவர்களும் மாநகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டார். தேர்தல் பிரச்சார நேரத்தில் நடந்த ஒரு பகிரங்க விவாதத்தின் போது, சபையில் இருந்த ஒருவர் சீன வம்சாவழியினரான ஒலிவியாவைப் பார்த்து "சீனாவுக்குத் திரும்பிப் போ" எனக் கூச்சலிட்டார்.

இந்தமாதிரியான சம்பவங்கள் கனடாவில் சில தரப்பினரிடையே இனவாதம் நீறுபூத்த நெருப்பாக இன்னமும் இருப்பதையே எடுத்துக் காட்டுகின்றன. ஆனால் கனடாவைப் பொறுத்தவரையில், அதிலும் குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தைப் பொறுத்தவரையில், "வந்தேறு குடிகள்" என்று அழைக்கப்படும் குடிவரவாளர்கள் கனடியப் பொருளாதார வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

எனவே உலகம் முழுவதுமுள்ள சுமார் 200 நாடுகளில் இருந்து வந்து கனடாவில் வாழும் இந்த மக்களின் இன, மொழி, மத மற்றும் கலாச்சாரத் தனித்துவங்களை பல்கலாச்சார வாழ்க்கை நெறியினை உயர்த்திப் பிடிக்கும் கனடிய அரசாங்கங்கள் பாதுகாப்பது அவசியமாகும்.

**– வி.ஆர்.வி**

# ஐ.தே.க அரசின் மேற்கத்தைய சார்புக் கொள்கை நாட்டுக்கு கேடு விளைவிக்கும்!

**- சமசமாஜக் கட்சி தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண**

நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறைமை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் லங்கா சமசமாஜக் கட்சி உறுதியான நிலைப்பாட்டில் உள்ளதாக அக்கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்திருக்கிறார்.

கொழும்பில் கட்சித் தலைமையகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தேர்தல் முறைச் சீரமைப்பு சம்பந்தமாகவும் கட்சி தொடர்ந்தும் வலியுறுத்தும் என்றும் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நாட்டை மிகப்பெரிய அளவுக்கு நாசம் செய்துள்ளது. அதை முற்றாக மாற்ற வேண்டும்.

அடுத்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல் தீர்க்கமான ஒன்றாகும். ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் தெரிவு செய்தார்களானால், அது சர்வாதிகார ஆட்சி ஏற்பட வழிவகுக்கும். இதற்கு தாய்லாந்து, எகிப்து போன்ற நாடுகளில் வலதுசாரி இராணுவங்கள் நாட்டின் அதிகாரத்தை எடுத்துக் கொண்டதை உதாரணமாகக் கூறலாம்.

ரணில் விக்கிரமசிங்க மேற்குலகின் சொற்படி செயற்படுகின்றார். ஐ.தே.கவின் ‘சிறீலங்காவின் மீள் எழுச்சி’ என்பது மேற்குலகின் நிகழ்ச்சி நிரலை நிறைவேற்றும் திட்டமாகும். அது அமுல்படுத்தப்பட்டால், மக்கள் தமது சொந்தக் கிணறுகளிலிருந்தும், குளங்களிலிருந்தும் நீர் எடுப்பதற்கும் பணம் செலுத்த நிர்ப்பந்திக்கப்படுவார்கள். பல்தேசியக் கம்பனிகள் நாட்டுக்கு உதவுவதாகச் சொல்வது, நாட்டின் வளங்களை ஒட்ட உறுஞ்சுவதற்கே ஆகும். எனவே தற்போதைய ஐ.தே.க. அரசாங்கத்தின் மேற்கத்தைய சார்புக் கொள்கைகள் நாட்டுக்கு கேட்டையே விளைவிக்கும்.

முன்னைய ஆட்சியில் ஊழல், உறவினர்களுக்குச் சலுகைகள், வீண்விரயம், முறைகேடுகள் போன்றவை இருந்ததை நாம் ஏற்றுக் கொள்கிறோம். அந்தத் தவறுகளை நீக்கி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளை சமசமாஜக் கட்சி ஆதரிக்கும்.

தற்போதைய அரசாங்கம் தேசியப் பிரச்சினைகள் சம்பந்தமாக வாக்குறுதி அளித்த எவற்றையும் நிறைவேற்றும் அறிகுறிகளையே காணோம். ஐ.தே.க. சொல்லும் தேசிய அரசாங்கம் என்ற திட்டம் போலியானது. அதை எமது கட்சி எதிர்க்கின்றது. ஆக இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரித்தானியாவில் வின்சன் சேர்ச்சில் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய அரசாங்கத்தைத் தவிர, உலகில் வேறு எந்தவொரு நாட்டிலும் தேசிய அரசாங்கங்கள் வெற்றிகரமாகச் செயற்பட்டதாக வரலாறு இல்லை.

புதிய அரசாங்கம் அமைத்துள்ள ‘தேசிய நிறைவேற்று குழு’வில் ஜே.வி.பி. ஒரு அங்கத்தவராக இருக்கின்றபோதும், அக்கட்சி நாட்டுக்கு உருப்படியான பங்களிப்பு எதனையும் செய்யவில்லை.

இவ்வாறு பேராசிரியர் திஸ்ஸ விதாரண கூறினார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சமசமாஜக் கட்சியின் சிரேஸ்ட உறுப்பினர் அனில் சொய்சா, கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது கட்சியின் தீர்மானத்தை மீறி எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவளித்து உடகவியலாளர் மாநாடு நடாத்திய கட்சி உறுப்பினர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

*

# 1,000 நாட்களைத் தொடும் ஜூலியன் அசங்கேயின் அஞ்ஞாதவாசம்!

அமெரிக்கா உட்பட பல உலக நாடுகளின் இரகசிய செய்திப் பரிவர்த்தனைகளையும், தகவல்களையும் தனது 'விக்கி லீக்ஸ்' (Wikileaks) இணையத்தளத்தின் ஊடாக வெளியிட்டு, சில நாடுகளின் சட்டத்துக்குப் புறம்பான செயற்பாடுகளை அம்பலப்படுத்தி பரபரப்பை ஏற்படுத்தியவர் ஜூலியன் அசங்கே (Julian Assange).

தமது முகத்திரை கிழிக்கப்பட்டதால் சக்தி வாய்ந்த சில நாடுகள் அவர் மீது ஆத்திரம் கொண்டன. இந்த நிலையில் அவர் சுவீடனில் வாழ்ந்த காலத்தில் அங்குள்ள சில பெண்களுடன் பாலியல் ரீதியில் முறைகேடாக நடந்து கொண்டார் எனக் குற்றம்சாட்டி அவர் மீது அந்த நாட்டில் வழக்குத் தொடரப்பட்டது. அதைத் தொடர்ந்து அவரை விசாரிப்பதற்காக லண்டனில் இருந்து சுவீடனுக்கு நாடு கடத்தும்படி



அந்நாட்டு அரசாங்கம் பிரித்தானிய அரசைக் கேட்டுக் கொண்டது.

தன்மீதான குற்றச்சாட்டை மறுத்த அசங்கே, இது தன்னைத் திட்டமிட்டு பழிவாங்குதற்கான நடவடிக்கை எனத் தெரிவித்தார். அத்துடன் தான் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக லண்டனில் உள்ள ஈகுவடோர் தூதரகத்தில் தஞ்சம் புகுந்தார்.

தமது தூதரகத்தில் தஞ்சம் புகுந்த அசங்கேவுக்கு ஈகுவடோர் நாடு 2013 ஒகஸ்டில் அரசியல் புகலிடம் வழங்குவதாக அறிவித்தது. அத்துடன் 2014 ஒகஸ்ட் 18இல் ஈகுவடோர் வெளிவிவகார அமைச்சர் றிச்சார்ட் பற்றினோ (Richard Patino) லண்டனில் உள்ள தனது நாட்டுத் தூதரகத்தில் வைத்து அசங்கேயை சந்தித்தும் உரையாடினார்.

ஆனால் அசங்கேக்கு ஈகுவடோர் நாடு அரசியல் புகலிடம் வழங்கினாலும், லண்டனில் உள்ள அந்நாட்டுத் தூதரகத்தை விட்டு வெளியேறி அந்த நாட்டுக்குச் செல்ல முடியாதபடி பிரித்தானிய அரசாங்கம் லண்டனிலுள்ள ஈகுவடோர் தூதரகத்துக்கு முன்னால் பொலிஸ் காவல் போட்டது. அசங்கே தூதரகத்தை விட்டு வெளியே காலடி எடுத்து வைத்தால் உடனே அவரைக் கைது செய்து சுவீடனிடம் ஒப்படைக்க பிரித்தானியப் பொலிசார் ஈகுவடோர் தூதரகத்துக்கு வெளியே 24 மணி நேரமும் காவல் இருக்கின்றனர்.

இதன் காரணமாக ஏறத்தாழ 1,000 நாட்களாக அசங்கே ஈகுவடோர் தூதரகத்துக்குள்ளே முடங்கிப்போய் இருக்கின்றார்.

அசங்கே மீதான பிடியாணையை விலக்கிக் கொள்ளும்படி சுவீடன் தலைநகரான ஸ்டொக்கோமில் (Stockholm) உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அவரது வழக்கறிஞர்கள் மனு ஒன்றைத் தாக்கல் செய்தனர். ஆனால் அதற்கு நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துவிட்டது.

**தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க..**

---

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

அமைப்புக்களினதும், வெளிநாட்டரசுகளினதும் நலன்களைப் பிரதிபலித்து தமது பாராளுமன்ற இருக்கைகளைத் தக்க வைத்துக்கொண்டு வலம் வருவார்கள் என்பதையே வரலாறு எமக்குப் போதிக்கிறது.

அரசியற் தீர்வு கிடைக்கின்றதோ இல்லையோ ராஜபக்ஷாவைப் பழிவாங்கி, அவருக்குத் தக்க பாடம் புகட்டிவிட்டோமென தமிழ்மக்களின் பெரும்பான்மைப் பிரிவு கருதுகிறது. இதேவேளை புலம்பெயர் முன்னணி அமைப்புக்கள் சில, வெளிநாட்டரசுகள் மைத்திரியுடன் கைகோர்த்துவிட்டால் தமது அரசியல் வியாபாரம் பட்டுப்போகுமென்றும், சர்வதேச போர்க்குற்ற விசாரணைகளைக் கிடப்பில்போட்டு தம்மைக் கைவிட்டு விடுமென்றும் அஞ்சுகின்றனர். ராஜபக்ஷ தொடர்ந்து பதவியிலிருந்திருந்தால், பெரியதொரு ராஜதந்திரப் போரையே நடாத்தி முடித்திருப்போம் என மார்தட்டுகின்றனர். மெல்லுவதற்கு அவலில்லையே என ஏங்குகின்றனர். அவர்களின் வர்க்க நலன்கள், அவர்களின் சொகுசு தேசியவாதம் அவர்களை அவ்வாறு பேச வைக்கிறது என்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

ராஜபக்ஷா, பாடசாலைகள், மருத்துவமனைகள், வீதிப்போக்குவரத்து போன்ற உட்கட்டுமான அபிவிருத்தி வேலைகளைப் பாரியஅளவில் நிறைவேற்றியிருந்தாலும், தனது காலத்திலேயே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை மாற்றியமைக்காது, தனது அதிகாரத்தைத் தொடர்ந்து தக்கவைக்கும் நோக்கில் 18ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்தமை ஜனநாயக விரோதமே. தனது காலத்திலேயே, 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு இணங்க தமிழ்மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையும் அவர் சார்ந்த தவறுகளே. எது எவ்வாறிருந்த போதிலும், அரசியல் விமர்சகர் தயான் ஜெயதிலக கூறியதுபோலவே ராஜபக்ஷாவின் தோல்வி ஒரு சுழற்சியின் முடிவே. யுத்தத்திற்கு முந்திய காலத்திற்குக் கூடத் திரும்புவதாகவும் இருக்கலாம். ஆம், இந்த மாற்றம் எண்ணைச் சட்டியிலிருந்து நெருப்பினுள் விழுவதாகக்கூட இருக்கலாம். பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். *

முன்பக்கத்தொடர்ச்சி...

முறை ஒழிப்பு முக்கியமானது. ஆனால் நடைமுறையில் 100 நாள் வேலைத்திட்டம் என்பது முன்னைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரையும், அவரது ஆட்சியின் ஆதரவாளர்களையும் பழி வாங்குவது என்பது இப்பொழுது கண்கூடாக தெரிய வந்துள்ளது.

225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் வெறுமனே 49 உறுப்பினர்களை மட்டும் கொண்ட சிறுபான்மை காபந்து அரசாங்கமான ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம், முன்னைய ஜனாதிபதி மகிந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கொண்டு வந்த மக்கள் நலன்சார் வரவு செலவு திட்டம் இருக்கத்தக்கதாக தமக்கு அடுத்த பொதுத் தேர்தலில் செல்வாக்கு தேடுவதற்காக இன்னொரு மக்களுக்கு சலுகை வழங்கும் வரவு செலவு திட்டத்தை கொண்டு வந்துள்ளது. நாட்டின் பொருளாதார நிலையை கணக்கில் எடுக்காது இந்தியாவில் தமிழக அரசுகள் மேற்கொள்ளும் இலவச திட்டங்கள் போல ஐ.தே.க அரசின் வரவு செலவு திட்டம் அமைந்துள்ளது.

புதிய அரசாங்கம் வாக்குறுதி அளித்தபடி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதில் இப்பொழுது விருப்பமின்மையும், இழுபறி நிலைமையும் தோன்றியுள்ளதை காண முடிகிறது. அதுமாத்திரமின்றி 'ஆசை அறுபது நாள் மோகம் முப்பது நாள்' என்பது போல ஐ.தே.கவுக்கும் மைத்திரி கோஸ்டிக்குமான 'தேன்நிலவு' முடிவுக்கு வரும் நிலையும் தோன்றியுள்ளது.

புதிய ஜனாதிபதி மைத்திரி வெற்றி பெற்ற பின் நடைபெற்ற பதவி ஏற்பு வைபவத்தின் போது, தான் இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட போவதில்லை என அறிவித்தார். அதன்மூலம் தற்போதைய பதவிக் காலத்தை முழுமையாக அனுபவிக்கப் போவதை சூசமாக வெளிப்படுத்தினார்.

எதிர்பாராமல் ஜனதிபதியாகி அதன் மூலம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை தன்வசம் எடுத்துக் கொண்டுள்ள மைத்திரி, தனது கட்சியினரை ஏதோ ஒரு பிரச்சினையில் மிரட்டுவதற்காக 'நீங்கள் எனது சொல்படி நடக்காவிட்டால், நான் நிறைவேற்று ஜனாதிபதி முறையை வைத்திருக்க வேண்டி வரும்' என்று எச்சரிக்கை செய்ததாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதற்கிடையில் அடுத்த பாராளுமன்ற தேர்தலில் சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளராக மகிந்த ராஜபக்சவை முன்னிறுத்த வேண்டும் என சுதந்திரக் கட்சிக்குள்ளும் வெளியிலும் உள்ள அவரது ஆதரவாளர்கள் பலமான பிரச்சாரம் ஒன்றை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கு கணிசமான மக்கள் ஆதரவும் உள்ளது. இதைப் பார்த்துவிட்டு மைத்திரியுடன் மகிந்த அரசை விட்டு வெளியேறிச் சென்றவரும், தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை பேச்சாளருமான ராஜித சேனரத்ன, 'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தால் மைத்திரி வெறும் பொம்மை ஜனாதிபதியாக இருக்க வேண்டி வரும். எனவே மைத்திரியையே பிரதமர் வேட்பாளராக சுதந்திரக் கட்சி நியமிக்க வேண்டும்' எனக் கூறியிருக்கிறார்.

மறுபக்கத்தில் ஐ.தே.க நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை உடனடியாக ஒழித்துக்கட்டிவிட்டு, 100 நாள் முடிந்தவுடன் ஏப்ரல் 23ஆம் திகதி பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தல் நடாத்த வேண்டும் என வலியுறுத்துகிறது. அப்படிச் செய்வதன் மூலம் சிறீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதி மைத்திரியின் அதிகாரத்தைப் பறிப்பதுடன், அக்கட்சி தன் உட்கட்சிப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு அவகாசம் வழங்காது, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொதுத்தேர்தலின் மூலம் தமது கட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதுதான் ஐ.தே.கவின் திட்டம்.

ஆனால் தவிர்க்கவியலாமல் சுதந்திரக் கட்சியின் சார்பாக பாராளுமன்ற எதிர்கட்சித் தலைமையை ஏற்றுள்ள நிமால் சிறிபால டிசில்வா தலைமையிலான சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ அணியினர் (இவர்கள் பாராளுமன்றத்தில் 132 உறுப்பினர்களுடன் இன்னமும் பெரும்பான்மையிராக உள்ளனர்), நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையில் உள்ள எல்லா அதிகாரங்களையும் நீக்கக்கூடாது என்றும், அத்துடன் அப்பதவியில் உள்ள சில அதிகாரங்களைக் குறைக்கும் அரசமைப்பு சீர்திருத்தத்தை மேற்கொள்ளும் போது, அதற்குச் சமாந்திரமாக தேர்தல் முறையிலும் சீர்திருத்தங்களை மேற்கொண்டால் மட்டுமே தமது கட்சி அதை ஆதரிக்கும் என தெளிவாகக் கூறியுள்ளார்.

இந்தக் கருத்தை அவர் தானாகக் கூறியிருக்க முடியாது. கட்சித் தலைவராகவும், தற்போதைய முறைமையின்படி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாகவும் இருக்கும் மைத்திரிபால சிறிசேனவின் ஆசிர்வாதம், விருப்பம் என்பனவற்றின் அடிப்படையிலேயே நிமால் சிறிபால இக்கருத்தை முன்வைத்திருக்கலாம் என எண்ண ஏதுண்டு.

இரண்டு பிரதான கட்சிகளுக்கிடையில் இப்படித் தோன்றியுள்ள இழுபறி அதிகாரப் போட்டியின் பாற்பட்டதே. இரு பகுதியினரும் ஒருவரது கழுத்தை ஒருவர் அறுப்பதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருப்பதையும், அதற்காக காய்களை நகர்த்துவதையுமே இவை படம் பிடித்துக் காட்டுகின்றன. இப்படியான நிலைமை ஒருபக்கம் நிலவ, மறுபக்கத்தில் இரு கட்சிகளும் இணைந்து 'தேசிய அரசாங்கம்' ஒன்றை அமைத்து செயற்படுவது பற்றிய கேலித்தனமான உரையாடல்களும் நிகழ்கின்றன.

உண்மையில் ஒரு நாட்டில் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படுவது யுத்தம், இயற்கைப் பேரழிவுகள், அந்நியப் படையெடுப்பு போன்ற தேசிய நெருக்கடிகளின் போதே. அப்படியான ஒரு சூழல் தற்பொழுது இலங்கையில் இல்லை. பிரிவினைவாதப் புலிகளுடனான யுத்தம் நடைபெற்ற காலத்தில் அப்படியொரு தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டிருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கும். அப்படி இல்லாமல் ஐ.தே.கவின் ஆதரவுடன் தான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டதால் அக்கட்சிக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரி தனது சுதந்திரக் கட்சியை தேசிய அரசாங்கம் என்ற படுகுழியில் தள்ள முயல்வது முற்றிலும் எதிர்க்கப்பட வேண்டியதாகும்.

குதர்க்கம் செய்வதில் இரண்டு பிரதான கட்சிகளும் காலத்தை விரயம் செய்யாமல், புதிய அரசாங்கம் செய்ய வேண்டியது எல்லாம், மக்களுக்கு வர்குறுதி அளித்தபடி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிக்க வேண்டியதே. அதுமாத்திரமல்லாமல், 1978இல் அப்போதை ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐ.தே.க அரசால் நாட்டு மக்களின் விருப்பத்திற்கு எதிராக கொண்டுவரப்பட்ட எதேச்சாதிகரமான அரசியல் அமைப்பு முறையை முற்றாக மாற்றி எழுத வேண்டும். வழமை போல ஆட்சிக்கு வரும் முன்பாக ஒன்றும், வந்த பின்னர் இன்னொன்றும் கூறி, நிறைவேற்று அதிகாரத்தை ருசி பார்ப்பதற்கு புதிய ஜனாதிபதியும் முயற்சி செய்தால் மக்கள் அதை உறுதியுடன் எதிர்த்துப் போராடி முறியடிக்க வேண்டும்.

இது ஏன் அவசியமெனில், உண்மையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் கடமையும், தேவையும், அருகதையும், கயவர்களான அரசியல்வாதிகளிடம் அல்ல நாட்டு மக்களிடமே இருக்கிறது. *

# இந்தியாவில் எழுத்தாளர்களை மௌனியாக்குதல்

## 'நியூயோர்க் ரைம்ஸ்' ஆசிரிய தலையங்கம்

இந்தியாவில் மிரட்டல் மூலம் தமிழ் எழுத்தாளர் பெருமாள் முருகனின் கதை தடை செய்யப்பட்ட விடயம் சென்னை உயர்நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது. முன்னதாக திரு.முருகன் தனது முகப் புத்தகத்தில் (Face Book) விடுத்த வருத்தம் தோய்ந்த அறிக்கையில், "பெருமாள் முருகன் என்ற எழுத்தாளன் இறந்துவிட்டான்" எனக் குறிப்பிட்டிருந்தார். வலதுசாரி இந்துத்துவக் குழுக்கள் அவரைச் சுற்றிவளைத்து உள்ளூர் அதிகாரிகளின் உதவியுடன் அவரது நாவலை விற்பனையிலிருந்து நீக்குவதற்குச் சம்மதிக்க வைத்த பின்னரே இது நடந்தது. எழுத்தாளரின் இந்த மோசமான நிலைமை இந்தியா முழுவதிலுமுள்ள எழுத்தாளர்களினதும், வாசகர்களினதும் ஆத்திரத்தைக் கிளறி அவருக்கு அலை போன்ற ஆதரவை உருவாக்கியது.

ஆளும் பாரதீய கட்சியினதும், இந்து வலதுசாரிக் குழுவான ராட்ஸ்ரிய சுவாயம்சேவக் சங்கினதும் செயற்பாட்டாளர்கள் இந்த நாவல் தங்களைத் தாக்குவதால் அதைத் தடை செய்ய வேண்டும் எனக் கோருகின்றனர். பல வாரங்களாக திரு.முருகனை தொலைபேசி அழைப்புகளுக்கூடாக மிரட்டியபின்னர், அதன் உச்சகட்டமாக டிசம்பர் பிற்பகுதியில் ஒரு கும்பல் அந்த நாவலின் கதைக்களமான நகரத்தில் அதைத் தீயிட்டுக் கொளுத்தியது. அந்தக் கும்பலின் கோபத்துக்குக் காரணம் திரு.முருகன் பிறந்து வளர்ந்த அந்தப் பகுதியில் உள்ள புராதன கோவில் ஒன்றில் கடந்த காலங்களில் நடைமுறையில் இருந்த சில நம்பிக்கைகளைப் நாவலில் எழுதியிருந்ததுதான். அது திருமணமாகியும் பிள்ளைகள் கிடைக்காத ஒரு பெண் அதை அடைவதற்காக முன்பின் தெரியாத வேறொரு ஆணுடன் உறவு கொள்ளும் நடைமுறையை உள்ளடக்கியிருந்தது.

இந்தவிதமான குழுக்கள் கலாச்சாரத்தைப் பாதுகாப்பவர்களாக மாறி எழுத்தாளர்களை பயமுறுத்தல் மூலம் மௌனிக்கச் செய்வது இந்தியாவில் இதுதான் முதல் தடவை. இதற்கு முதல் 2002இல் ஜெய்பூர் இலக்கிய விழாவில் எழுத்தாளர் சல்மான் ருஸ்டி நேரடியாகப் பங்குபற்றுவதை இரத்துச் செய்திருந்த போதிலும், அவருடைய நிகழ்ச்சி ஒன்றை வீடியோ மூலம் விழாவின் ஏற்பாட்டாளர் வில்லியம் டல்றிம்பிள் (William Dalrymple) ஒழுங்கு செய்திருந்த போது, முஸ்லீம் செயற்பாட்டாளர்கள் வன்முறையில் ஈடுபடுவோம் என மிரட்டியதால் அதையும் இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது.

முருகனின் விடயம் சம்பந்தமாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்கம் சென்னை உயர்நீதி மன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தபோது, அந்த மனுவை கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான பயமுறுத்தல்கள் என்ற விரிவான மனுவாக தாக்கல் செய்யும்படி நீதிமன்றம் புத்திசாதுரியத்துடன் கேட்டுள்ளது. நீதிமன்றம் அதுபற்றிக் கூறுகையில், "எமது மிகப்பெரிய கவலை என்னவெனில், எழுத்தாளர்கள் எதை எழுத வேண்டும், எதை எழுதக்கூடாது என்றும், எது சரி, எது பிழை எனவும், சட்டத்துக்குப் புறம்பான குழுக்கள் தமது அதிகாரத்தைப் பிரயோகித்துத் தீர்மானிப்பதுதான்" எனத் தெரிவித்துள்ளது.

இது சுதந்திரமாகக் கருத்துக் கூறுவது சம்பந்தமான இந்திய நீதிமன்றம் ஒன்றின் ஆறுதலான வார்த்தையாகும்.

(தமிழகத்தின் கவனிப்புக்குரிய எழுத்தாளர்களில் ஒருவரான பெருமாள் முருகன் எழுதிய 'மாதொருபாகன்' என்ற நாவலை, அது இந்துமதத்தின் நம்பிக்கைகளைத் தாக்குகிறது என்று சொல்லி இந்துத்துவ வெறியர்கள்



கண்டனம் செய்து தீயிட்டுக் கொளுத்தியதுடன், அந்த நாவலை எழுதிய பெருமாள் முருகன் இனிமேல் எழுதக்கூடாது எனவும், உள்ளூர் அரச அதிகாரிகளின் முன்னிலையில் அவரிடம் பலவந்த ஒப்புதலும் பெற்றுக் கொண்டனர். அந்தச் சம்பவம் சம்பந்தமாக அமெரிக்காவின் பிரபல நாளேடான 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகையின் சர்வதேசப்பதிப்பின் 2015 பெப்ருவரி 7-8 இதழில் வெளியான ஆசிரிய தலையங்கமே மேலே தரப்பட்டுள்ளது) *

14ம் பக்கத்தொடர்ச்சி...

தான் சுவீடனுக்கு நாடு கடத்தப்பட்டால் அந்நாட்டு அரசாங்கம் தன்னை அமெரிக்காவிடம் ஒப்படைத்து விடக்கூடும் என அசங்கே அச்சம் வெளியிட்டு இருக்கிறார். அத்துடன் லண்டனில் உள்ள ஈகுவடோர் தூதரகத்தில் தன்னைச் சந்திக்க வருபவர்கள் பற்றிய விபரங்களைத் திரட்டுவதிலும் பிரித்தானியப் பொலிசார் முனைப்புக் காட்டி வருவதாகவும் அசங்கே குறைப்பட்டுள்ளார்.

இதற்கிடையில் அசங்கேயை கைது செய்வதற்கு காவல் இருக்கும் பிரித்தானியப் பொலிசாருக்கு இதுவரை ஆன செலவு 10 மில்லியன் பவுண்களை எட்டியுள்ளது. அதாவது ஒரு நாளைக்கு 10,000 பவுண்கள் செலவாகின்றது!

இதற்கிடையில் ஈகுவடோர் தூதரகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில், அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. *